உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்.

திருவதிகை மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

# உண்மைவிளக்கமூலமும்,

உரையும

இஃது,

காஞ்சிபுரம்

மகாவித்வான

## கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

## கா - சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

கனனிகைபபோ

## முருகேச முதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

உ

சிவமயம்.

# தனியன்.

மன்னதிகை வாழு மனவா சகங்கடந்தான்
மின்னையை வாழவிலுறு மெய்கண்டான்-பன்மறைகளு
வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள்வழுவா
யுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று

---

சிவமயம்.

திருசசிறறமபலம்.

# உண்மைவிளக்கம்.

வெணபா.

வண்மைதரு மாகநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மை விளகக முறைசெய்யத-திண்மதஞ்சேர்
அநதிநிறத தநதிமுகத தொந்திவயிற றைஙகரனைப்
பநதமறப புநதியுள வைபபாம.

இ-ள், வணமைதருமாகமநூல் - வளப்பத்தைத்தாராநின்ற வாகமநூலிலே,—வைததபொருளவழுவாவுணமைவிளக்கமுறை செய்ய-பரமேஸவர னருளிசசெயதுவைதத பதியி னுண்மையும பசுவினுணமையும பாசததினுணமையும் வழுவாமலிநதநூலிலே விளஙகசசெயவது பொருட்டாக,—திணமதஞ்சோ - திணணிய மூனறுமதமும பொருநதபபட்ட,—அநதிநிறதது - செககாவான மபோனற சிவநத திருமேனியினையும,—தநதிமுகத்து - யானை முகததினையும,—தொநதிவயிறறு - பண்டியுணடான திருவுந்தியினையும,—ஐஙகரனை - ஐநது ஸ்ரீஅததததினையுமுடைய விகனேஸவரப் பிள்ளையாரை,—பந்தமற பாசபநதஙகளெல்லாநீஙக, புநதியுள் வைப்பாம-அடியேனுடையமனதிலே தியானம்பணணுகின்றேன்.

பொய்காட்டிப் பொய்யகறறிப் போதாநந் தப்பொருளா
மெய்காட்டுமெய்கண்டாய் விணணப்பம்-பொய்காட்டா

மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவினை
வையாநீ தான்கேட் டருள்.

இ-ள். பொய்காட்டி தேகாதி பிரபஞ்சத்தைப்பொய்யென
க்காட்டி, பொய்யகற்றி-பொய்யைநீக்கி, போதாநந்தப்பொருளா
மெய்காட்டு மெய்கண்டாய விண்ணப்பம் அறிவிலே யாநந்தசொ
ரூபமாயிருக்கிற வுண்மையைக் காட்டுகிற மெய்கண்டநாதனே
யொருவிண்ணப்பம், பொய்காட்டாமெய்யா-பொய்யைக்காட்டா
தமெய்சசத்தியத்தை யுடையவனே, திருவெண்ணெய்வித்தகா-
திருவெண்ணெய்நல்லூரிலே எழுந்தருளியிருக்கப்பட்ட ஞானசா
ரியனே, சுத்தவினைவையாநீதான்கேட்டருள-சுத்தமாகிய வினாவி
னைச் சுவாமீ தேவரீர் திருச்செவிசாற்றியருளவேண்டும். (௨)

ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்
மாறா வினையேது மற்றிவற்றின்-வேறாக
நானேது நீயேது நாதனட மஞ்செழுத்துந்
தானேது தேசிகனே சாற்று

இ-ள். ஆறாறுதத்துவமேது-முப்பத்தாறுதத்துவங்களாவதே
து ஆணவமேது - ஆணவமலமாவதேது, அன்றேதானமாறாவி
னையேது-அநாதியிலேவிட்டு நீங்காமலிருக்கிற வினையாவதேது,
மற்றிவற்றின் வேறாகநானேது - இந்த மலங்களுக்கு வேறாய்
ஒன்றுபட்டிருக்கிற வென்னுடைய சொரூபமாவதேது, நீயே
து-தேவரீருடைய சொரூபமாவதேது, நாதனடம்-பரமேஸ்வர
னுடைய திருநடமாவதேது, அஞ்செழுத்துந் தானேது-பஞ்சாக்
கரத்தி னுண்மையாவதேது, தேசிகனேசாற்று-சுவாமீ திருவுளம்
பற்றியருளவேண்டும். (௩)

உள்ளபடி யித்தை யுரைக்கக்கே ளொன்றனக்கு
வள்ளலரு ளாலன்று மாயமலாதது-தெள்ளியசீ

ராகமங்கள் சொன்னவகையிலே யானந்த
யோக நிகழ்புதல்வா வுற்று.

இ-ள் உள்ளபடியித்தையுரைக்கக்கேளென்றனக்கு-உண்டா னபடியே நீ கேட்டவின்னவைச் சொல்லுகிறோங்கேள், வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து - பரமேஸ்வரன்றனது காருண்ணியத்தி னாலே யநாதியிலே திருவாய்மலர்ந்து, தெள்ளியசீராகமங்கள் சொன்னவகையிலே தெளிவாயிருக்கிற வாகமங்கள்சொன்னமு றைமையிலே ஆநந்தயோகநிகழ் புதல்வாவுற்று-ஆநந்தயோகத்தி லே யடங்கிநிற்கிற பிள்ளாயுற்றுப்பொருந்திக்கேள். (௪)

நாற்கோணம் பூமிபுனல் நண்ணு மதி யின்பாதி
யேற்குமனல் முக்கோண மெப்போது-மாக்கு
மறுகோணங் காலவட்ட மாகாய மான்மா
வுறுகாய மாமிவற்றா லுற்று.

இ-ள் நாற்கோணம்பூமி - பிருதிவி நாலுகோணமாயிருக் கும், புனல்நண்ணுமதியின்பாதி-அப்புவானது அர்த்தசந்திரனை யபோன்றதாயிருக்கும், ஏற்குமனல்முக்கோணம்-பொருந்தப்பட் டதேயுவானது மூன்று கோணமாயிருக்கும், எப்போது மாக்கு மறுகோணங்கால - பொருந்தப்பட்டவாயுவானது எந்தக்காலமு மறுகோணமாயிருக்கும் வட்டமாகாயம்-ஆகாயமானது வட்டமா யிருக்கும், ஆன்மா வுறுகாயமாமிவற்றாலுற்று - ஆன்மாவுக்குப் பஞ்சபூதபரிணாமமாயிருக்கிறதேகமாயவந்துபொருந்தும். (௫)

பொன்பார் புனல்வெண்மை பொங்கு மனல்சிவப்பு
வன்கால் கருமைவெளி வான்றூம-மென்பார்
எழுத்து லவரயவப் பாராதிக் கென்று
மழுத்தமதாய் நிற்கு மது.

இ-ள். பொன்பார் பிருதிவியானது பொன்னிறமாயிருக்கும், புனல்வெண்மை - அப்புவானது வெள்ளைநிறமாயிருக்கும், பொங்குமனல்சிவப்பு மிகுந்து வாராநின்ற தேயுவானது சிவந்தநிறமாயிருக்கும், வன்கால் கருமை-வளப்பத்தைத் தாராநின்ற வாயுவானது கருமைநிறமாயிருக்கும், வளர்வான்தூமம் - மிகுந்தவாகாசமானது புகைநிறமாயிருக்கும், என்பர் - என்றிப்படிப் பெரியோர்கள்சொல்லுவார்கள், எழுத்துல வரயவ்வ பாராதிகளென்றும்-பிருதிவிக்கு லகாரமும் அப்புவுக்கு வகாரமும் தேயுவுக்கு ரகாரமும் வாயுவுக்கு யகாரமும் ஆகாயத்துக்கு அகாரமும், அக்ஷரமதாய் நிற்குமது இப்படிப் பலமாயப் பொருந்திநிற்கும். (௫)

குறிகுலிசங் கோணங்கள் கொள்சுவத்தி கோண
மறுபுள்ளி யாரமுத விந்துப்-பிறிவின்றி
மண்புனற்றீ கால்வான மன்னு மடைவேயென்
றெண்புகல்வ ராகமமோர்ந் தும்

இ-ள். குறிகுலிசங் கோணங்கள் கொள்சுவத்தி கோணமறு புள்ளியாரமுத விந்துப் பிறிவின்றி மண்புனற்றீ காலவானம்-பிருதிவிக்கு வச்சிரமும் அப்புவிக்குத் தாமரைப்பூவும் தேயுவிக்குச் சுவத்திகமும் வாயுவுக்கு அறுபுள்ளியும் ஆகாயத்துக்கு வமுதவிந்துவும் விட்டுநீங்காமல், மன்னுமடைவேயென்றெண்புகல வாராகமமோர்ந்தும இந்தவடையாளங்களிலே நிலைபெற்றிருக்குமென்று ஒள்ளியபின்னா யாகமங்களிலே சொல்லும். (௭)

பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்க
ளாரா ரயனரி யைவரா-மோரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கா றேற்றமுத லைந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார்.

இ-ள். பாராதி யைந்துக்கும் பன்னுமதி தெய்வங்களாரார்-பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஐந்துக்குஞ் சொல்லப்பட்ட

வதிதேவதைகளாராரென்று கேட்கிறாயானால், அயனாதியைவ ராய-பிருதிவிக்குப்பிரமாவும் அப்புவிக்குவிஷ்ணுவும் தேயுவிக்கு ருத்திரரும் வாயுவுக்கு மகேஸ்வரரும் ஆகாயத்துக்குச் சதாசிவரு மென ஐந்துபேராம், ஒரோவொருதொழி லவர்க்குச் சொல்லுங்கால- ஒவ்வொருத்தர் கிருத்தியங்களைச் சொல்லுமிடத்து, தோற்றமுந் நிலைந்தும் பழுத்தறவே பண்ணுவார்காண் பார் சிருஷ்டி திதி சங்கா ரந் திரோபவ மநுக்கிரக மைந்துங் குற்றமறச்செய்வார்களென் று விசாரித்தறிவாயாக. (௮)

படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்
றுடைப்ப னுருத்திரனுஞ் சொல்லில்-இடப்பெறவே
யென்றுந் திரோபவிப்ப ரீசா சதாசிவரு
மன்றே யநுக்கிரக ராம்.

இ-ள். படைப்பனயன - பிரமா சிருஷ்டிப்பன், அளிப்பன் பங்கயக்கண்மாயன-செந்தாமரைக் கண்ணையுடைய மகாவிஷ்ணு இரக்ஷிப்பன், துடைப்ப னுருத்திரனுஞ்சொல்லில-சொல்லுமி டத்து ருத்திரமூர்த்தியானவர் சங்கரிப்பர், இடப்பெறவே-நிச்சய மாகவே, என்றுந் திரோவிப்பரீசா மஹேஸ்வரமூர்த்தியானவ ரெந்தக்காலமுந் திரோபவம்பண்ணுவர், சதாசிவருமன்றே யநு க்கிரகராம்-சதாசிவமூர்த்தியானவ ரநாதியிலே யநுக்கிரகம்பண் ணுவார். (௯)

மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமா
மொண்கனலசுட் டொன்றுவிக்கு மோவாமல்-வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம்
நிரந்தரமாய் நிற்கு நிறைந்து.

இ-ள். மண்கடினமாய்த்தரிக்கும்-பிருதிவியானது விடயங் களிலே கடினகுணத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும், வாரிகுளி ர்ந்தேபதமாம்-அப்புவானது விடயங்களிலேநெகிழுந்தகுணத்தை

க்கொடுத்துக்கொண்டுநிற்கும் ' ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும்-தேயுவானது விடயங்களிலே சுட்டொன்று தலைப்பண்ணிக்கொண்டு நிற்கும் ஓவாமல-விட்டுநீங்காமல், வண்கால்பரந்து சலித்துத்திரட்டும்-வளப்பத்தையுடைய வாயுவானது விடயங்களிலே திரட்டிக்கூட்டாநிற்கும், பார்க்கிலாகாயம்நிரந்தரமாய்நிற்குநிறைந்து-விசாரிக்குமிடத்து ஆகாயம் விடயங்களுக்கெல்லா நிரந்தரமா யிடங்கொடுத்துக்கொண்டுநிற்கும். (௰)

உள்ளபடிமாபூத மோதினோமுன் றனக்குக்
கள்ளமிருமைம்புலனுங் கட்டுரைக்கில்-மெள்ளவே
யோசைபரிச முருவஞ்சுவைநாற்ற
மாசைதருமைம்புலனே யாம்.

இ-ள். உள்ளபடிமாபூதமோதினோமுன் றனக்கு-உண்டானபடியே மகத்தாகிய பஞ்சபூதங்களுஞ் சொன்னோம், கள்ளமிருமைம்புலனுங் கட்டுரைக்கில் - கள்ளமிருந்து வரப்பட்டாநின்றசத்தாதிவிடயங்களைச்சொல்லுமிடத்து, மெள்ளவே-மெய்யவே, ஓசைபரிசமுருவஞ் சுவைநாற்ற மாசைதருமைம்புலனேயாம் - ஆசையைக்கொடாநின்ற சத்த பரிச ரூப ரச கந்தமென்றறிவாயாக.()

ஞானேந்திரியங்கள் நன்றாயுரைக்கக்கேள்
ஊனமிகுபூத முற்றிடமா-யீனமாஞ்
சத்தாதியையறியுந் தானஞ்செவிதோல்கண்
ணத்தாவுமூக்கென் றறி.

இ-ள். ஞானேந்திரியங்கள்நன்றாயுரைக்கக்கேள் - ஞானேந்திரியங்கள் நன்றாய்ச்சொல்லுகிறோங்கேள், ஊனமிகு பூதமுற்றிடமாம்-ஊனமிகுத்துவரப்பட்டாநின்ற பஞ்சபூதங்களிடமாக, ஈனமாஞ் சத்தாதியையறியுந் தானஞ்செவிதோல் கண்ணத்தாவுமூக்கென்றறி-ஈனத்துவமாயிருக்கிற சத்தாதிவிடயங்களை யறிகிறவிட

மேதென்று கேட்கிறாயானால் சுரோத்திரந் தொக்கு சக்ஷு சிங்வுவை யாக்கிராணமென் றறிவாயாக. (௰௨)

வானிடமாய்நின்று செவி மனனுமொலியதனை
யீனமிருந்தோல்கா லிடமாக-வூனப
பரிசந்தனையறியும் பார்வையிற்கண்ணங்கி
விரவியுருவங் காணுமே.

இ-ள். வானிடமாய நின்று செவிமனனுமொலியதனை ஆகாயத்தினிடமாகநின்று சுரோத்திரஞ் சத்தத்தையறியும், ஈனமிருந்தோல் காலிடமாக ஊனப்பரிசந்தனையறியும் - வாயுவினிடமாக நின்று ஈனத்துவமாயிருக்கிற தொக்குப்பரிசத்தையறியும், பார்வையிற்கண்ணங்கி விரவியுருவங்காணுமே - தேயுவினிடமாக நின்று சக்ஷுரூபத்தையறியும். (௰௩)

நன்றுகநீரிடமாய் நாவிரதந் தானறியும்
பொன்றுமண்மூக்குப் பூவிடமாய்-நின்றறியு
மென்றேதுமன்றே யிறையாகமிதனை
வென்றார்சென்றாரின்ப வீடு.

இ-ள். நன்றுக நீரிடமாய நாவிரதந்தானறியும் - நல்லஅப்புவினிடமாகநின்று சிங்வுவை ரசத்தையறியும், பொன்றுமண்மூக்குப் பூவிடமாயநின்றறியும் - பிருதிவியினிடமாகநின்று கெடாத வாக்கிராணங் கந்தத்தையறியும், என்றேதுமன்றே யிறையாகமம் - பரமேஸ்வரன் றிருவுளம்பற்றின வேதாகமங்களிலேயாதியிலேயென் றிப்படிச்சொல்லும், இதனை வென்றார் சென்றாரின்பவீடு - இந்தப் பஞ்சேந்திரியங்களை நிக்கிரகம்பண்ணின பேர்களே மோக்ஷவீடடைந்தவர்கள். (௰௪)

கண்ணுதனூலோதியிடுங் கன்மேந்திரியங்க
ளெண்ணுமவசனாதிக ளிடமாக-நண்ணியிடும்

வாக்குப்பாதம்பாணி மன்னுகுதமுபத்த
மாய்க்கருதுநாளு மறை.

இ-ள், வாக்குக்கு வசனமும் பாதத்துக்குக் கமனமும் பாணிக்குத் தானமும் பாயுருவுக்கு விசர்க்கமும் உபத்தத்துக்கு ஆனந்தமும் நாடோறு மிந்தமுறைமையிலேபொருந்தியிடுமென்றுநெற்றிக்கண்ணை யுடைய பரமேஸ்வர னருளிய வேதாகமங்களிலே சொல்லும். (௧௫)

வாக்காகாயமிடமாய் வந்துவசனிக்குங்கால்
போக்காருங்காற்றிடமாய்ப் புலங்கியன-லேற்கு
மிடுங்கைகுதநீ ரிடமாயமலாதி
விடும்பாரிடமுபத்தம் விந்து.

இ-ள். வாக்காகாயமிடமாய் வந்துவசனிக்கும்-ஆகாயமிடமாய்நின்று வாக்குவசனத்தைச்சொல்லும், காலபோக்காருங்காற்றிடமாய-வாயுவினிடமாகநின்று பாதம் கமனம்பண்ணும், புலங்கியனலேற்குமிங்கை-தேயுவினிடமாகநின்று பாணியிடுதலுமேற்றலுஞ்செய்யும், குதநீரிடமாய மலாதிவிடும் - அப்புவினிடமாகநின்று பாயுரு மலசலத்தைப்பிரிவிக்கும், பாரிடமுபத்தம்விந்து-பிருதிவியினிடமாகநின்று உபத்தமானந்தத்தைவிடும். (௧௬)

அந்தக்கரண மடைவேயுரைக்கக்கேள்
ளந்தமனம்புத்தியுட னாங்காரஞ்-சிந்தையிவை
பற்றியதுநிச்சயித்துப் பல்காலெழுந்திருந்தங்
குற்றதுசிந்திக்கு முணர்

இ-ள். அந்தக்கரணமடைவே யுரைக்கக்கேள்-அந்தக்கரணங்களுடைய வடைவைச் சொல்லுகிறோங்கேள், அந்தமனம்புத்தியுட னாங்காரஞ் சிந்தை யிவைபற்றியது நிச்சயித்துப் பல்காலெழுந்திருந் தங்குற்றது சிந்திக்கும் - மனம்பற்றும் புத்திநிச்ச

யிக்கும் ஆங்காரமெழுந்திருக்கும் சித்தஞ்சிந்திக்கும், உணர்-அறிவாயாக (௰௭)

ஓதியிடொலாறு முற்றானமத்தத்துவமென்
றோதியருணூ லறையுங்காண-டீதறவே
வித்தியாதத்துவங்க டன்னைவிளம்பக்கே
ளுத்தமனேநன்றா யுனக்கு

இ-ள். ஓதியிடொலாறு முற்றானமத்தத்துவமென்றோதியருணூலறையுங்காண - சொல்லப்பட்ட விருபத்தாலும் பொருந்தப்பட்டஆன்மதத்துவமென்று பரமேஸ்வரனுடைய வேதாகமங்களிலேசொல்லும், தீதறவே-குற்றமறவேவித்தியாதத்துவங்கடன்னை விளம்பக்கே ளுத்தமனே நன்றாயுனக்கு - உத்தமனாகிய பிள்ளாய வித்தியாதத்துவங்களேழையுஞ்சொல்லுகிறோங்கேள். (௰௮)

காலநியதி கருதுங்கலைவித்தை
யேலவிராகம்புருட னேமாயை-மாலறவே
சொன்னோமடைவாகச் சொன்னவிவைதனுண்மை
யுன்னியுணக்கா முற்று

இ-ள். காலநியதி கருதுங்கலைவித்தை யேலவிராகம புருடனேமாயை மாலறவே - காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் மாயை மயக்கமறவே, சொன்னோமடைவாக - இந்தமுறைமையிலே சொன்னோம், சொன்னவிவை தனுண்மையுன்னியுணக்காமுற்று-இதனுடைய சுபாவத்தைச் சொல்லுகிறோம் உற்றுப்பொருந்திக்கேள். (௰௯)

எல்லைபலம்புதுவை யெப்போதுநிச்சயித்தல்
அல்லறருங்கிரியை யான்மாவுக்-கொல்லை
யறிவாசையைம்புலனு மாரவருங்காலங்
குறியாய்மயக்கென்று கொள்.

இ-ள் எல்லைப்பலமபுதுமை-காலததுவமானது கழிகாலத் தெல்லையும நிகழ்காலததுபபலததையும் எதிர்காலததுப்புதுமை யுமபொருததுவிககும, எபபோதுநிசசயிததல - நியதிததுவமா னது ஏநதககாலமும கனமததையிவவளவென றுநிசசயபபணணி நிறுததும, அலலறருவகிரியை-கலைபானது ஆணவத்தைதச சிறிது நீககி யானமாவுககுககிரியையையெழுபபும, ஆனமாவுககொலலை யறிவு - விததியாததுவமான தானயாவுககுச சீககிரததிலே யறி வையெழுபபும, ஆசை-இராகததுவமானது பெறறபதாாததங் களைச சிறிதாககிபபெருநதிலே யிசசையுணடாககும ஐமபுலனு மாரவருஙகாலம-ஆனமா பஞசேநதிரியஙகளிடமாகச சததாதிவி டயஙகளைப புசிககவருகிற வவதாரததில் புருடததுவமானதுவிட யததிலே யழுநதுவிககும, குறியாயமயககெனறுகொள-மாயையா னது தொனறெறினைககவொடடாமல மயககநதைச செயயுமெ னறறிவாயாக. (உ௰)

விததியா தததுவங்க ளேழும விளம்பினேம
சுததமாந தததுவஙகள் சொலலககேள - நிததமாஞ்
சுத்தவிததை யீசுரமபின சொலலுஞ சதாசிவநற
சததிசிவங காணவைக டான.

இ-ள். விததியாததுவங்க ளேழும் விளம்பினேம-விததியா தத்துவஙகளேழுஞ சொனனோம், சுததமாநதததுவஙகள் சொல் லககேள்-சுததமாயிருககிற சிவதததுவஙகளைநதையுஞ சொலலுகி றேனகேள், நிததமாஞசுததவித்தைக யீசுரமபினசொலலும் சதா சிவநற்சததி சிவஙகாணவைகடான நிததியமாயிருககிற சுத்தவித் தை ஈஸவரம் சாதாககியம சததிசிவமெனறறிவாயாக. (உக)

சுத்தவிததை ஞானமிகுந் தொனமையா மீசுரநதா
னதகன றொழிலதிக மாககியிடு - மொத்தவிவை

* சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை
யாதார ஞானவுரு வாம

இ-ள், சுத்தவித்தை ஞானமிகும்-சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும், தொன்மையா மீசுரந்தானத்தனொ ழிலதிகமாகியிடும்-பழமையாக ரப்பட்டாநின்ற ஈஸ்வரதத்துவ மானது ஞானங்குறைந்து கிரியையேறியிருக்கும், ஓதவிவைசா தாக்கியமென்னும்-சாதாக்கிய தத்துவம் ஞானமுங்கிரியையமொ த்திருக்கும், சத்திசிவங்கிரியை யாதாரஞானவுருவாம் - சத்தி தத் துவம் கிரியையாயிருக்கும் சிவதத்துவமஞானமாயிருக்கும் (௨௨)

ஆறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக
மாறு மலமிரண்டும் வாசொல்லக் - கூறி
லறியாமை யாணவநீ யானசுக துக்கங்
குறியா வினையென்று கொள்.

இ-ள் ஆறுதத்துவமுஞ் சொன்னோமடைவாக-முப்பத் தாறு தத்துவங்களுடைய முறைமையுஞ்சொன்னோம், மாறுமல மிரண்டும்வாசொல்ல - விட்டுநீங்காமலிருக்கிற வாணவமல்த்தை யுங் கன்மமல்த்தையுஞ் சொல்லுகிறோங்கேள், கூறில்-சொல்லுமி டத்து, அறியாமையாணவம்-அறியாமையைப் பண்ணிக்கொண் டுநிற்கிற தாணவமலம், நீயான சுகதுக்கங் குறியாவினை யென்று கொள்-சுகதுக்கமென்னுறையு நினையாமல நீதானுயிருக்கிறது தா னே கன்மமலமென்றறிவாயாக. (௨௩)

ஆறு தத்துவமு மாணவமும் வல்வினையு
மாறு வருளால் வகுத்துரைத்தீர் - வேறாக
வென்னை யெனக்கறியக் காட்டி ரிவைகண்டே
னுன்னரிய தேசிகனே யுற்று

* சாதாக்கியத்தின விரிவைச சதாசிவருபமென்னு நூலிற்காண்க.

இ-ள் ஆறாறுதத்துவமும்-முப்பத்தாறுதத்துவமும் ஆணவமும்-ஆணவமலத்தையும், வல்வினையும்-கன்மமலத்தையும், மாறாவருளால் வகுத்தளித்தீர்-விட்டுநீங்காத கிருபையினாலே பகுத்தருளிச்செய்தீர், வேறாகவென்னை யெனக்கறியக்காட்டீர்-இந்த மலங்களுக்கு வேறாக வொன்றுபட்டிருக்கிற வென்னுடைய சொரூபத்தையு மருளிச்செய்யவேணும், இவைகண்டேன்-இந்த மூன்றுமலங்களையுந் தரிசித்தேன், உன்னரியதேசிகனேயுற்று-நினைத்தற்கரிதாகிய தேசிகனே யுற்றபொருந்தத்தக்கதாக (உ௪)

நன்றா யுரைக்கக்கேள் நல்லசித்தின் முன்னசித்தங்
கொன்றாது சித்தசித்தை யோராது - நின்றிவற்றை
யன்றே பகுத்தறிவ தானமாவே யென்றுமறை
குன்றாம லோதுங் குறித்து

இ-ள் நன்றாயுரைக்கக்கேள் - நீகேட்டதான்மதரிசனத்தை நன்றாகச்சொல்லுகிறேங்கேள், நல்லசித்தின் முன்னசித்தங் கொன்றாது நல்லசித்தாகிய சிவத்தின்முன்னே யசித்தாகியபாசமில்லாது, சித்தசித்தையோராது-நல்லசித்தாகிய சிவத்துக்கு அசித்தாகிய பாசத்தையறியவேண்டுவதில்லை, நின்றிவற்றையன்றே பகுத்தறிவதானமாவே-சித்தாகியசிவத்தையும் அசித்தாகியபாசத்தையும் அநாதியிலே பொருந்தி விசாரித்தறிந்து அறிகிறதானமாவே, என்றுமறை குன்றாமலோதுங் குறித்து-பரமேசுரனுடைய வேதாகமங்களிலே குறையாமற் சொல்லும். (உ௫)

தத்துவங்க ளாறாறுந் தன்னைத்தா னென்றறியா
தத்துவமை யென்னுமொழி யப்படிக்கேள் - சுத்தமா
மாறு சுவையு மறியாது தன்னைத்தான்
கூறி லவையிவைபோற் கொள்.

இ-ள். தத்துவங்களாறாறுந்தன்னைத்தானென்றறியாது-முப்பத்தாறுதத்துவங்களும் ஜடமாகையினாலே தன்னுடைய சொரு

பந்தத்தைத் தானறியச்செய்யாது, சித்தன்மையென்னிலியம்பக்கேள-என்றமுறைமையென்று கேட்கிறீராகில் சொல்லுகிறேன்கேள், சுத்தமா மாறுசுவையுமறியாமலுந் தன்னைத்தான்-சுத்தமாயிருக்கிற அறுவகைச்சுவையுந் தன்னுடைய சொரூபத்தைத் தானறியச்செய்யாது, கூறில-சொல்லுமிடத்து அவையிவைபோற்கொள-முப்பத்தாறுதத்துவங்களுஞ் சுவைகளைப்போலத் தன்னுடையசொரூபத்தைத் தானறியச்செய்யாது. (உசு)

ஆறு சுவையு மருந்தி யவைதன்னை
வேறொருவன் கூறியிடு மேன்மைபோ - லாறாறு
மொன்றொன்றாய நாடியுணர்ந் தோதி லதி லுற்றறிவாய
நின்றபொரு டானேகா ணீ

இ-ள் ஆறுசுவையு மருந்தியவைதன்னை வேறொருவன்கூறியிடுமேன்மைபோல - அறுவகைச்சுவையும் புசித்துக்கைக்கிறது காக்கிறது * கூர்க்கிறது துவர்க்கிறது புளிக்கிறது தித்திக்கிறதென்று கண்டுணர்ந்தொருவன் சொல்லுகிறமுறைமைபோல, ஆறாறுமொன்றொன்றாய நாடியுணர்ந்து-முப்பத்தாறு தத்துவங்களையு மொன்றொன்றாக விசாரித்தறிந்து, ஓதில-சொல்லுமிடத்து, அதிலுற்றறிவாய நின்றபொருடானேகாணீ - முப்பத்தாறு தத்துவங்களையும் பொருந்தியறிந்திருக்கிறவறிவுகாணியாகிய ஆன்மா. (உ௭)

குன்றா வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்றாத நாமமுருவம் போயினீர் - நின்றருக்கன்
கண்ணொளிக்குக் காட்டுமோ போலே யுணர்த்திலை
நண்ணியறி வித்திடுவோர் நாம

இ-ள் குன்றாவருளாலே கூறினீரென்வடிவு - கெடாதகிருபையினாலே அடியேனுடையசொரூபத்தையருளிச்செய்தீர், பொன்றாத நாமமுருவம்போகியீர் - கெடாததேவரீருடைய சொரூபத்

---

* கூர்க்கிறது-உவர்க்கிறது.

னையு மடியேனுக்கருள்செய்யவேண்டும், நின்றொருகண் கண்ணுக் குக் காட்டும்போல - ஆதித்தப்பிரகாசமானது கண்ணுக்குப் பதார்த்தங்களைக் காட்டிக்கொண்டு நிற்கிறதுபோல், உன்றறிவினை யணியறிவித்திடுவோநாம்-உன்றறிவிலே பொருந்திநின் றறிவித் துவருவோம்நாம். (௨௮)

**அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக**
**ளின்றி யறியா திவையென்ன - நின்றதுபோ**
**லோவாம லுன்னை யுணர்த்துவோ முன்னறிவின்**
**மேவாமன் மேவிநா மே**

இ-ள், அன்றியுங்கேள்-அறிவில்லாமலொரு சொல்லுகிறோம் கேள் ஆன்மாவாலாய்ந்தறியு மைம்பொறிகளின்றியறியாதிவை யென்ன-ஆன்மாவிலேயறிந்து காரியப்பட்டுவருகிற பஞ்சேந்தி ரியங்களும் ஆன்மாவினாலேயறிந்துகாரியப்பட்டுவருகிறோமென் றறியச்செய்யாது, நின்றதுபோல-அந்தப் பஞ்சேந்திரியங்களைப் போல, ஓவாமலுன்னையுணர்த்துவோம்-விட்டுநீங்காமனின்றுண ர்த்தறிவிப்போம், உன்னறிவின் மேவாமன் மேவிநாமே-உன்ன றிவிலே பொருந்தாமற் பொருந்திநின் றறிவித்துவரச்செய்தேயு நீயறியாமலிருந்த மப்படிபோல. (௨௯)

**அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல**
**மிக்க வுயிர்க்குயிராய் மேவினோ - மெக்கண்ணு**
**நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று**
**நல்லா கமமோது நாடு**

இ-ள் அக்கரங்கட்கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்-ஐம் பத்தோரக்ஷரத்துக்கும் அகரமாகிய வக்ஷரமுயிராய் நின்றது போல, மிக்கவுயிர்க்குயிராய் மேவினோம்-சர்வான்மாக்களிடத்தி லேயும் அறிவுக்கறிவாயப் பொருந்திநின்றோம், எக்கண்ணுநில்லா விடத்துயிர்க்கு நில்லாதறிவென்று-ஜடசித்துக்களெல்லாம் காத்தா

நிறைந்து நின்றதினாலல்ல தறியச்செய்யாதென்று, நல்லாகம மோதுநாடு-நல்லவேதாகமங்களிலே சொல்லுமென்று விசாரித் தறிவாயாக. (௧௰)

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தா
லுற்றுருவாய் நின்றாட லுள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று.

இ-ள். நற்றவத்தோர் தாங்காண-நல்லதவத்தையுடையவா னமாக்கள் தரிசிக்கத்தக்கதாக, நாதாந்தத்தஞ்செழுத்தாலுற்றுருவாய் நின்றாடல்-நாதாந்தத்தின்முடிவிலே பஞ்சாக்ஷரமே திருமேனியாகக்கொண்டு நிருத்தஞ்செய்கிற முறைமை, உள்ளபடி பெற்றிடநான்-உண்டானபடியே யடியேன் தரிசிக்கத்தக்கதாக, விண்ணார்பொழில் வெண்ணெய் மெய்கண்டநாதனே - ஆகாயத்தளவுதய ளாவியிருக்கா நின்ற சோலைகள்சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரே திருப்பதியாகவெழுந்தருளியிருக்கின்ற மெய்கண்டசுவாமி, தண்ணா ரருளாலேசாற்று - குளிர்ந்தகிருபையினாலே திருவுளம்பற்றியருள வேண்டும். (௧௧)

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெ ழுத்தஞ் சாலே
யவாயமற நின்றாடு வான்.

இ-ள். எட்டுமிரண்டு முருவானலிங்கத்தேநட்டம் எட்டுமிரண்டுமுருவாயிருக்கிறயகாரமாகிய வானமாவினிடத்திலேநடனம், புதல்வாநவிலக்கேள்-பிள்ளாய் சொல்லக்கேள், சிட்டன் - பரமசிவன், சிவாயநமவென்னுந் திருவெழுத்தஞ்சாலே யவாயமற நின்றாடுவான்-பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு ஆன்மாக்கள் பிறவியறுந்தக்கதாக நிருத்தஞ்செய்வன். (௧௨)

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இ-ள். ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே - ஐயனே நல்லதிருவம்பலத்தின்கண்ணே எழுந்தருளிநின்று திருநடனஞ்செய்கிறமுறைமையைச் சொல்லுகிறேன்கேள், நாடுந்திருவடியிலேநகரம்-உணரிய ஸ்ரீபாதத்திலே நகாரமாகவும், கூடும்மகாரமுதரம்-பொருந்தப்பட்ட திருவுதரத்திலே மகாரமாகவும், வளர்தோள்சிகரம்-மிகுந்துவரப்பட்டநின்ற திருத்தோளிலே சிகாரமாகவும், பகருமுகம்வா-சொல்லப்பட்ட திருமுகத்திலேவகாரமாகவும், முடியப்பார திருமுடியிலேயகாரமாகவும் இந்தமுறைமையிலே நமசிவாயவென்கிறபஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு திருநடனஞ்செய்வாரென்று விசாரித்தறிவாயாக (௩௩)

சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
மார்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கி நகர மடியக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

இ-ள். சேர்க்குந்துடிசிகரம் - டமரகமேந்திய ஸ்ரீ அத்தத்திலே சிகாரமாகவும், சிக்கனவாவீசுகரம் - வீசிய ஸ்ரீ அத்தத்திலே வகாரமாகவும், ஆர்க்குமயகரமபயகரம்-அமைத்த ஸ்ரீ அத்தத்திலே யகாரமாகவும், பார்க்கிலிறைக்கங்கிநகரம் - அக்கினியேந்திய ஸ்ரீ அத்தத்திலே நகாரமாகவும், அடிக்கீழ்முயலகனார் தங்குமகரமது தான-முயலகனைமிதித்த பாதத்திலே மகாரமாகவும் இந்தமுறைமையிலே பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு திருநடனஞ்செய்வாரென் றறிவாயாக. (௩௪)

ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா - மாங்கார
மற்றா ரறிவா ரணியம் பலத்தா னாடல்கண்டு
பெற்றார் பிறப்பற்றார் பின்

இ-ள். ஓங்காரமேநற்றிருவாசி - பிரணவந்தானே நல்லதிருவாசியாகவும், உற்றதனி னீங்காவெழுத்தேநிறைசுடராம் - பிரணவத்தைவிட்டுநீங்காத பஞ்சாக்கரமே யுள்ளொளியாகவும், ஆங்காரமற்றா ரறிவா - யானெனதென்னுஞ் செருக்கற்றவர்களறிவார்கள், அணியம்பலத்தா னாடல்கண்டுபெற்றார் பிறப்பற்றார்பின் - அழகியதிருவம்பலத்தின்கண்ணிலே யெழுந்தருளிநின்று நிருத்தஞ்செய்யு முறைமையைத் தெரிசித்தவர்களே பின்பு சனனமரணமற்றவர்கள். (௩௫)

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

இ-ள். தோற்றந்துடியதனில் - டமருகமேந்திய ஸ்ரீஅத்தத்திலே சிருஷ்டியாகவும், தோயுந்திதியமைப்பில் - அமைத்தஸ்ரீ அத்தத்திலே ஆன்மா இரக்ஷையாகவும், சாற்றியிடுமங்கியிலே சங்காரம் - அக்கினியேந்திய ஸ்ரீஅத்தத்திலே மலசங்காரமாகவும், ஊற்றமாயூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோதம் - உறுதியாயூன்றிய ஸ்ரீபாதத்திலே பிரபஞ்சத்தை மறைக்குந் திரோதமாகவும், முத்திநான்றமலர்ப்பதத்தேநாடு - தூக்கியஸ்ரீபாதத்திலே யநுக்கிரகமுத்தியாகவும் இந்தமுறைமையிலே முத்தி பஞ்சகிருத்தியமே திருக்கூத்தென்று விசாரித்தறிவாயாக. (௩௬)

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து - நேயத்தா

லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்.

இ-ள். மாயைதனையுதறி-டமருகமேந்திய ஸ்ரீஅஸ்தத்தினாலே மாயையைநீக்கி, வல்வினையைச்சுட்டு-அக்கினியேந்திய ஸ்ரீ அஸ்தத்தினாலே கன்மமலத்தைச்சுட்டு, மலஞ்சாயவமுக்கி - ஊன்றிய ஸ்ரீபாதத்தினாலே மலமேலிடாமலமிழுத்தி, அருடானெடுத்து-தூக்கியபாதத்தினாலே யருளேதனுவாகநிறுத்தி, நேயத்தாலானந்தவாரிதியி லான்மாவைத் தானழுத்தல்தான் - கிருபையினாலேயமைத்த ஸ்ரீஅஸ்தத்தினாலே யானந்தவெள்ளத்திலே ஆன்மாவை யழுத்துகிறதுதான், எந்தையார் பாதந்தான்-எம்முடையசுவாமியாகிய பரமேஸ்வரனுடைய திருக்கூத்துமுறைமை (௧௭)

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும் - ஆனந்த
மொண்டருந்தி நின்றாடல் காணுமருள் மூர்த்தியாய்க்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து

இ-ள். மோனந்தமாமுனிவர் மும்மலத்தைமோசித்து-மௌனஞானிகள் கர்த்தாவினுடையகிருபையினாலே மூன்றுமலங்களையு நீக்கி, தானந்தமானிடத்தே தங்கியிடும்-ஆன்மபோதமுடிந்தவிடத்திலேயுதயமாகிற, ஆனந்தமொண்டருந்தி நின்றாடல்காணும்-ஆனந்தவெள்ளத்திலே முகந்துகொண்டநுபவிக்கிறதுதான், அருண்மூர்த்தியாய்க்கொண்ட திருவம்பலத்தான்கூத்து - ஆன்மாக்களையிரக்ஷிக்கவேணுமெனகிற காருண்ணியமே திருமேனியாகக்கொண்டு திருவம்பலத்தினைக் கண்ணி யெழுந்தருளிநின்று நிருத்தஞ்செய்கிற முறைமைத்தாம். (௧௮)

உரையுணர்வுக் கெட்டா வொருவன்இரு பஞ்சாக்
கரத்தால் வரைமகடான பாதி - யுரையிடமாய்க்

காணும படியே கருணையுருக கொண்டாடல்
பேணு மவர்கருண்டோ பிறபபு

இ-ள உரையுணாவுககெட்டா வொருவன்-மனவாக்குக்கா யஙகளுககெட்டாத வொப்பறறபாமேஸவரன, மிகுபஞசாககர ததால-பஞசாககரததினுலே மிகுநதகாருணியமே திருமேனியாக ககொணடு, பரையிடமாய்நினறு பராசததியாகிய திருவமபலவிட மாகநினறு, வரைமகடான காணுமபடியே-மலையரையனமகளகா ணும்படிககு, கருணையுருககொணடு - கிருபையினுலேதிருமேனி கொணடெழுநதருளி, ஆடலபேணுமவாகருணடோபிறப்பு-ஆடி யருளியதிருக்கூததைவிருமபினபெயாகளபினபுசனனமறறவாகள்.

காதாநத நாடகததை நனறு யருளசெயதீ
ரோதீ யெழுததஞசு முளளபடி - தீதறவே
யஞசெழுததீ தாகி லழியுமெழுத தாயவிடுமோ
தஞச வருட குருவே சாறறு.

இ-ள. நாதாநதநாடகததை நனறு யருள்செய்தீா-தத்துவாதீ தமாயிருககிற திருக்கூததுமுறைமையை நனறு யருளசெயதீா; அஞசெழுததீதாகி லழியுமெழுததாயவிடுமோ-பஞசாககரமெழுத துகளிலேயொன்றுயிருககுமாகில அழிகிற வெழுததுகளாமோ, தஞசவருட்குருவே-புகலிடமாயிருககிறகிருபையுடையதேசிகனே நீதறவேயோதி யெழுததஞசுமுளளபடி சாறறு குறறமறறபஞசாக கரததி னுண்மையை யுணடானபடியே யடியேனுக கருளசெயய வேணடும். (சுஎ)

உறற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சறறும பொருடாண சலியாது - மறறதுவே
மீசனரு ளாவி யெழிலாா திரோதமல
மாகியெழுத தஞசினடை வாம.

இ-ள் ஓதுங்கால்-சொல்லுமிடத்து, உற்றகுறிபழியும்-பொருந்தப்பட்ட வெழுத்துகளுடைய குறிகளழியும், பாடைகளிற் சாற்றும்பொருடான் சலியாது - பதினெண்பாஷைகளிலே யுண்டானபொருள்கள் சற்றுங்கெடாது, மற்றதுகேள் பஞ்சாக்கரத்தினுண்மையைச் சொல்லுகிறமுறைமைகேள், ஈசனருளாவியெழிலார்திரோதமலம் ஆசிலெழுத்தஞ்சி னடைவாம் - சிவன் அருள் ஆன்மா வழங்கியதிரோதம் மலமஐந்தும் குற்றமில்லாத பஞ்சாக்கரத்தின் முறைமைத்தாம், (சக)

சிவனரு ளாவி திரோதமல மைந்து
மவனெழுத் தஞ்சி னடைவா - மிவனின்று
நம்முதலா யோதிலரு ளூடாது நாமமருள்
சிம்முதலா யோதுநீ சென்று.

இ-ள் சிவனருளாவி திரோதமலமைந்து மவனெழுத்தஞ்சி னடைவாம் - சிவம் அருள் ஆன்மா திரோதம் மலமஐந்தும் பரமேஸ்வரனுடைய பஞ்சாக்கரத்தின் முறைமைத்தாம், இவனின்று-பகுக்கப்பட்டவானமாவின்று, நம்முதலாயோதிலருளூடாது-நகாரமுதலாகவுச்சரிக்கில் அருள்பொருந்தாது, நாமமருள்சிம்முதலாயோதுநீசென்று - ஆசாரியரநுக்கிரகம்பண்ணின முறைமையிலேநின்று சிகாரமுதலாக வுச்சரிக்கிலருள்பொருந்தும். ()

அண்ணல் முதலா யழகா ரெழுத்தைந்து
மெண்ணி யிராப்பகலற் றின்பத்தே - நண்ணி
யருளா னதுசிவத்தே யாக்குமணு வை
யிருளா னதுதீர வின்று.

இ-ள் அண்ணல்முதலா யழகாரெழுத்தைந்தும்-சிம்முதலாகியழகுபொருந்திய பஞ்சாக்கரமைந்தும், எண்ணில்-இடைவிடாமலுச்சரிக்கில், இராப்பகலற்றின்பத்தே - கேவலசகலமற்றவிடத்தே, நண்ணியருளானது சிவத்தேயாக்கு மணுவையிருளானதுதீர

வீன்று - ஆன்மாவுக்கு ஆணவமலமானதுநீங்கவருளானது பேரின்பமாகிய சிவத்திலே பொருத்திவிக்கும். (௪௩)

ஆதி மலமிரண்டு மாதியா யோதினாற்
சேதியா மும்மலமுந் தீர்வாகா-போத
மதிப்பரிதா மின்பத்தே வாழலா மாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே.

இ-ள். ஆதிமலமிரண்டு மாதியா யோதினாற் சேதியாமும்மலமுந்தீர்வாகா-ஆதியாகிய நகாரமும் மலமாகியமகாரமும்இரண்டுமடியாகவுச்சரித்தால உறுதியாக மும்மலமுநீங்கி ஆன்மாவருளைப்பொருந்திப் பேரின்பவாழ்வை யுறமாட்டாது 'உறுமுறைமை கூறுமிடத்து, மாறிவிதிப்படியோதஞ்செழுத்தும (ஓதினால்) போதமதிப்பரிதா மின்பத்தே வாழலாம - நகாரமுதலாக வுச்சரிக்கு முறைமையைமாற்றிச் சிவமுதலாக அத் திருவெழுத் தஞ்சையும் விதிப்படியுச்சரிக்க வான்மபோதத்தால் மதித்தற்கரிதாகிய பேரின்பவாழ்விலெய்தி வாழலாம நீயுஞ்சிவமுதலாகவுச்சரிப்பாயாக'

அஞ்செழுத்தே யாகமமு மண்ணலருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணமனைத்து-மஞ்செழுத்தே
யானந்தத் தாண்டவமும யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும.

இ-ள் அஞ்செழுத்தேயாகமமு மண்ணலருமறையும - பரமேஸ்வரன திருவுளம்பற்றியருளின இருபத்தெட்டு சிவாகமங்களும நாலுவேதமும பஞ்சாக்கரமே, அஞ்செழுத்தே யாதிபுராணமனைத்தும-பதினெண்புராணங்களனைத்தும பஞ்சாக்கரமே, அஞ்செழுத்தே யானந்தத் தாண்டவமும-ஆனந்தநடனமும பஞ்சாக்கரமே, யாவைக்குமப்பாலா மோனந்தமாமுத்தியும - தத்துவாதீதமாகிய மௌனஞானமாயிருக்கிறபரமுத்தியும்பஞ்சாக்கரமே;

முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை யிசையிற்றி-னொத்த
விரதமணம் வெம்மை யெழினாதம் போல
விரவுவரென் றோதும் விதி.

இ-ள். முத்திதனையடைந்தோர் - மோக்ஷத்தையடைந்தபெரியோர்கள் பேரின்பத்திலே யிரண்டறநிற்கிற முறைமைக்குத் திருஷ்டாந்தமெப்படியென்று கேட்கிறாயானால், முந்துபழம்போதங்கி வித்தகமாம்வீணையிசையிற்றினொத்தவிரதமணம் வெம்மையெழினாதம்போல - பழமும் ரசமும்போலவும் பூவும் மணமும்போலவும் அக்கினியும் வெம்மையும்போலவும் பண்ணும் ஓசையும் போலவும், விரவுவரென்றோதும் விதி - இப்படி யிரண்டறப்பொருந்தி நிற்பாரென்று ஆகமங்களிலே சொல்லும். (௪௬)

தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்
பெத்தத்தி னிற்கின்ற பெற்றிபோல்-முத்திதனிற்
சித்தமல மற்றார் செறிந்திடுவ ரென்றுமறை
சத்தியமா யோதியிடுந் தான்.

இ-ள். தத்துவங்களெல்லாஞ் சகசமா யான்மாவிற் பெத்தத்தினிற்கின்ற பெற்றிபோல - பெத்தத்திசையிலே தத்துவங்களெல்லாம் ஆன்மாவினிடத்திலே யிரண்டறநிற்கிறமுறைமைபோல, முத்திதனிற்சித்தமலமற்றார் செறிந்திடுவரென்று மறை சத்தியமா யோதியிடுந்தான் - முத்திதிசையிலே சகசமலமறப் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் சிவனிடத்திலே இரண்டறப் பொருந்துவார்களென்று சத்தியமாகவே சிவாகமஞ்சொல்லும். (௪௭)

ஆதவன்றன் சந்நிதியி லம்புலியி னூர்சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோ-னாதாந்த

தன்னை திருவடியி லானமா வணைந்தின்பக்
கண்ணணி லழுந்தியிடுங் காண.

இ-ள். ஆதவன்றனை சந்நிதியி லம்புலியினொளி சோதி பேதமற நின்ற பெற்றிபோல-ஆதித்தப்பிரகாசத்தின் முன்னே சந்திர பிரகாசமான திரண்டறநிற்கிற முறைமைபோல, நாதாந்தத்தனை திருவடியி லானமாவணைந்து-சுத்தாதீதமாயிருக்கிற திருவடிஞானத்திலே யானமாபொருந்தி, இன்பக்கண்ணணி லழுந்தியிடுங்காண - பேரின்பத்திலே யிரண்டறப் பொருந்துமென்றறிவாயாக. (சஅ)

சென்றிவன்றா னென்றிற் சிவபூ ரணஞ்சிதையு
மன்றவன்றா னென்றுமெனி லந்நியமா-மின்றிரண்டு
மற்றநிலை யேதென்னி லாதித்த னந்தனவிழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்.

இ-ள். சென்றிவன்றானென்றிற் சிவபூரணஞ்சிதையும்-ஆன்மா சிவனைச்சென்று பொருந்துவானாகில் சிவனுக்குப் பூரணத்துவமில்லையாகவேணும், அன்றவன்றானென்றுமெனி லந்நியமாம்-சிவஞானமாகவைச்சென்று பொருந்துவானாகி லப்பேர் வானமா வேறாயிருக்கவேணும், இன்றிரண்டு மற்றநிலையேதென்னில்-இரண்டுமுறைமையுமல்லாமல் நின்ற நிலைக்குத் திருஷ்டாந்தமெப்படியென்று கேட்கிறாயானால் ஆதித்தனந்தனவிழிக் குற்றமற நின்றதுபோற்கொள்-அந்தகனுக்குப் படலநீங்கினகாலத்து ஆதித்தப்பிரகாசமுங் கண்ணினுடைய வொளியும் இரண்டறக் கலந்து நின்றாற்போல. (சகூ)

வாக்கு மனமிறந்த வானகருணை யாளனொரு
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா-நீக்காப்
பதியினைப்போ னித்தம் பசுபாச மொன்றாய்
கதியிடத்து முனதினையுங் காட்டு.

இ-ள். வாக்குமனமிறந்த வான்கருணை யாளனொரு தாக்கறவேயிற்கு தனிமுதல்வா - மனவாக்குக் காயங்களுக் கெட்டாதபொருளே வடிவாய அடியார்களிடத்திலே யிரண்டாகிறகிற வொப்பற்ற கர்த்தாவே —நீக்காப் பதியினைப்போ னித்தம் பசு பாச மென்றும்-விட்டு நீங்காமலிருக்கிற பதியினைப்போற் பசுவும் பாசமு நித்தியமென்றருளிச்செய்தது, — கதியிடத்து மூன்றினையுங்காட்டு-முத்தியிலும் பதி பசு பாச மூன்றுமுதலும் அழியா மனிற்கிற முறைமையை அடியேனுக்கு அருளிச்செய்ய வேணும். (௫௰)

முத்திதனில் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு-மெத்தவே
யின்பங்கொ டுத்தலிறை யித்தவினை வித்தல்மல
மன்புடனே கண்டுகொளப் பா.

இ-ள். முத்திதனில் மூன்றுமுதலு மொழியக்கேளப்பா-அப்பனே முத்தியிலும் பதிபசுபாசமூன்று முதலுமழியாமனிற்கிற முறைமையைச்சொல்லுகிறோங்கேள், —சுத்தவநுபோகத்தைத் துய்த்தலணு-பேரின்பத்தைப் புசிக்கிற தான்மா, —மெத்தவேயின்பங்கொடுத்த லிறை -பேரின்பத்தை மிகுதியுங் கொடுக்கிறது கர்த்தா, இத்தைவிளைவித்தல்மலம் - பேரின்பத்தை மேன்மேலும் விளைக்கிறது மலம், — அன்புடனே கண்டுகொள் - அன்பினாலே யறிவாயாக. (௫௧)

அப்பாலிம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பா யருளாலே செப்பக்கே-ளொப்பில்
குருலிங்க வேடமெனக் கூறியிவை கொண்டார்
கருவொன்றி யில்லார்கள் காண்.

இ - ள். அப்பா விமுத்திக் கழியாத காரணந்தான் செப்பாயருளாலே செப்பக்கேள் - அப்பனே முத்தியைப்பெறுகைக் கழியாதகாரணஞ் சொல்லுகிறோம் கேட்பாயாக, — ஒப்பில - உவமையில்லாதிருக்கிற சிவம், — குருலிங்கவேடமெனக்கூறில் குருவும் லிங்கமும் சங்கமமுமேயென்று கூறுகையால் சிந்தித்துக் கண்டு வழிபடுகிற சிவமென்று, — இவை கொண்டோர் - இந்த முப்பொருளையு முண்மையாகக் கொண்டோர், — கருவொன்றில்லார்கள் காண - கருவிலேபொருந்திப் பிறந்திறவார்கள், (௩௨)

கற்று மனம்போற கசிந்துகசிந் தேயுருகி
யுற்றுசா னிலிங்க முயர்வேடம்-பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனி னின்றிடுவர் பார்.

இ - ள். கற்றுமனம்போறகசிந்துகசிந்தேயுருகி - ஈன்றணிதான பசுவைப்போலுள்ளுருகிக்கசிந்துகசிந்து, — உற்றுசானிலிங்க முயர்வேடம்பற்றுக - மானிடதேகத்தைப்பொருந்திவந்த ஆசாரியனையும் சிவலிங்கப்பெருமானையும் பெரியவேடத்தாரையும் இந்த மூன்றுவடிவைத் தங்களுக்குப்பற்றுன தெய்வமாகக் கொண்டு, — முத்தித்தலைவர் முழுமலத்தை மோசிக்கும் பத்திதனினின்றிடுவர்பார் - பரமமுத்தியைப் பெறுகைக்குத் தலையான சத்திநிபாதத்தையுடையதபோதனர் முழுமலமாகியபாசங்களைக் களைக் கரையழிந்த பத்தியிலேகண்ணே நிற்பார் நீயுமிந்த முறைமையிலேபார்த்து வழிபட்டு நிற்பாயாக, (௩௩)

வாழ்த்தே னருட்கடலே வற்றுப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமன மேதினியிற்-சூழ்ந்துவிடா

வெண்ணெய்ச சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத தவபபயனே யுறறு.

இ-ள் சூழநதவிடாவெண்ணெய் மேதினியில்சுவேதவன மெயகணடநாதனே-சததியததைத தரிசிததவா விடடுநீஙகாததிருவெணணெய் நலலூரிலே யெழுநதருளியிருககபபட்டசுவேதவனனெனகிற பிளளைத திருநாமததையுடையமெயகணடநாதனே உணமைததவப்பயனே-உணமையான தவததைபபண்ணினவாகளுககுப பயனுபுளளவனே,—வறுப்பவககடலில வீழநதேயலையாமல-பிறவியாகியகடலிலஅடியேன வீழநதலையாமல,—அருட்கடலே வாழநதேன-தேவரீா காருணணியததினாலே வாழநதேன. (௫௪)

திருச்சிற்றம்பலம்.

---

உண்மைவிளககம் மூலமும் உரையும்

முறறிறறு.